


உ




# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு

(கார்த்திகை – NOVEMBER– 2022)




ஸ்ரீ மகா பெரியவா பூர்ண பலத்துடன்

“லோகா சமஸ்தா சுகினோ பவந்து”

“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே

தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே

சென்மமும் மரணமும் இன்றித் தீருமே

இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்”

# உள்ளடக்க அட்டவணை


தோரண வாயில் .......... 4

அப்பாலும் அடி சார்ந்தார் .......... 5

குருநாதருக்கு நடைபெற்ற கனகாபிஷேகம் .......... 7

ஸ்தல மரங்கள் பற்றி ஒரு ஆய்வு .......... 8

தாவர நோய்கள்: இந்துக்களின் அற்புத மூலிகை அறிவு .......... 10

யார் பிச்சைக்காரர்? .......... 13

பலன் தரும் பதிகங்கள் .......... 16

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

அட்டை உள்ள படங்கள் அனைத்தும் கூகிள் படத் தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பார்ந்த ஆஸ்திக பெருமக்களுக்கு அன்பான வணக்கம்.

நீங்கள் காணும் இந்த கார்த்திகை மாத பூர்ணபலம் மின்னிதழ் 12-வது இதழாக வெளியாகிறது. ஆம்! விளையாட்டாக ஆரம்பித்து ஓராண்டுகாலம் ஆகப்போகிறது. மிக்க மகிழ்ச்சி!

இதுவரை தாங்கள் காட்டிய ஆதரவை தொடர்ந்து அன்பிற்கும் ஆதரவிற்கும் நெஞ்சார்ந்த நன்றி. தொடர்ந்து கட்டுரைகள் அளித்து வரும் அன்பு நெஞ்சங்களுக்கு இதய பூர்வ நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இதனை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னதே எனது மகன்தான். இன்றும் அவன்தான் இந்த இதழ் வெளியாக உதவி வருகிறான்.

வழக்கமாக இடம் பெரும் விஷயங்களோடு, இந்த இதழில் மகா பெரியவாளை தரிசித்து, அனுக்கிரஹம் பெற்ற மேலை நாட்டவர்கள் பல்வேறு கால கட்டங்களில் தாங்கள் பெற்ற அனுபவங்களை சொல்லி இருக்கிறார்கள். அதிலிருந்தும் சிலவற்றை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். இவைகளை படிக்கும் போது, மஹாபெரியவாளை அவர்கள் புரிந்து கொண்டதை போல, அனுபவித்ததை போல நாம் புரிந்து கொள்ளவும் இல்லை. அனுபவிக்கவும் இல்லை என்றே தோன்றுகிறது. உண்மையான ஆன்மீக தேடலில், ஆத்ம தாகத்தில் அவர்கள் இருந்திருக்கிறார்கள். மனித வாழ்க்கையின் முடிந்த முடிவான, "நான் யார்"? என்ற தேடலில் பெரியவாளை அணுகினார்கள். பலன் அடைந்தார்கள். ஆனால் நாமோ, நமது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களையும், இடர்பாடுகளையும் நீக்கிக் கொள்ளவே, சுகமான வாழ்க்கையை பெறவே அவரை அண்டி வந்தோம், வருகிறோம் என்பதே மறுக்க முடியாத உண்மை. பிறவா வரத்தையே தர வல்ல அந்த தயாபரனை சில்லறை தேவைகளுக்காக அணுகி வருகிறோம். இனியாகிலும் நாம் அவரிடம் கேட்க வேண்டியதை யாசிக்க வேண்டியதை யாசித்து பெற முயல வேண்டும்.

"கோரிக்கையற்று கிடக்குதண்ணே, வேரில் பழுத்த பலா" - என்றபடி இல்லாமல், அள்ள அள்ள குறையாத அந்த அமுத சுரபியை, அட்சய பாத்திரத்தை சரியான வழியிலே பயன் படுத்திக்கொள்வோம். அதற்கான நல்ல சிந்தனையையும் அவரிடமே யாசித்துப் பெறுவோம்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி.வேணுகோபால்

*****

# அப்பாலும் அடி சார்ந்தார்

*(டாக்டர் டி. எம். பி. மஹாதேவன்)*

("யார் உற்றார்? யார் அயலார்?" என்று அன்று மணிவாசகர் சிவபெருமானைப் பற்றி வினவியது இன்றைய சிவாஸ்தான மூர்த்திக்கும் அப்படியே பொருந்தும்: தேசம், மதம், கலாச்சாரம் இவற்றுக்கு அப்பாற்பட்டு, ஆச்சார்யர்களின் அடி சார்ந்துள்ள அடியார் குழாத்தின் சிலரைக் குறித்துப் பேராசிரியர் அவர்கள் சிறப்புக் கட்டுரை நல்குகிறார்)

ஒரு குறிப்பிட்ட சம்பிரதாயத்தை சேர்ந்தோர்க்கு மட்டுமன்றி, உலகம் முழுவதிலும் அஞ்ஞான இருளில் தவிப்போருக்கு ஞான ஒளியை பாய்ச்சுவதையே ஆதி சங்கரர் பிரவிப் பணியாகக் கொண்டு அவதரித்தார். இப்பணி அவரது அவதாரக் காலத்தோடு முற்றுப் பெற்றுப் போவது அல்ல. எக்காலமும் தொடர்ந்து வர வேண்டியது. இத் திருப்பணி தொடருவதற்காகவே அவர் நாட்டின் பல பகுதிகளிலும் மடங்களை நிறுவி அவற்றில் தமது திருநாமத்திலேயே ஆச்சாரிய பரம்பரையை ஏற்படுத்தினார். இவற்றுள் நானிலத்தின் ஞானதீபமான கச்சியம்பதியில் காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார். இப்பீடத்தில் ஆதிசங்கரரிலிருந்து தொடர்ந்து வந்துள்ள குரு பரம்பரையில் அறுபத்தி எட்டாமவராக திகழும் ஸ்ரீ பெரியவர்கள் ஆதி சங்கரரின் அதே நோக்கத்தைத் தமது ஒரே லக்ஷியமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்-அதாவது, ஒரு குறிப்பிட்ட சம்பிரதாயத்தைச் சேர்ந்தோரை மட்டுமின்றி உலகம் முழுவதையும் உள்ளூர உயர்த்தி உருமாற்றி பூரணத்துவத்தை நோக்கி முன்னேறச் செய்து வருகிறார்.

ஸ்ரீ பெரியவர்களின் அருள்மயமான தரிசன மாத்திரத்தில், அடியோடு கவரப்பட்டு, தங்களது உள்ளத்தில் ஓர் உன்னதப் புரட்சியை உணர்ந்த அந்நியர் பலர் பலர். 'சன்னியார்' என்பது நமக்குத்தான். மாமுனிவருக்கு ஏர் எவர் அந்நியம்?

நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன், பெரியவர்களை சந்தித்து உரையாடிய பால்பிரண்டன் இந்த மேற்கத்தியர்களில் முதலாமவர். அன்றைய பெரியவர்களின் திருவுருவம் பற்றி அவர் எழுதினார். "எனது விஸ்தாரமான சித்திரசாலையில் அந்த உன்னதமான முகம் ஒரு மதிப்புக்குரிய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு விட்டது. மத்திய சகாப்தம் எனப்படும் காலத்தை அணிசெய்த கிறிஸ்துவ மகான்களுக்கு அத்தகைய முகம் இருந்திருக்கக் கூடும்! ஒரே ஒரு வித்யாசம்: இம்முகத்தில் கூடுதலாக அறிவுத் திறனும் பிரதிபலித்தது. இப்போது நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் பெரியவர்களின் என்பதாவது ஜெயந்தி கொண்டாட்டத்திற்கு பால்பிரண்டன் அளித்துள்ள வாழ்த்துறையில், இன்றைய உலக சூழ்நிலையில், பெரியவர்களின் பிற்விப் பணியை ஆற்றுவது எத்தனைக் கடினமானது எனக் குறிப்பிட்டு "ஸ்ரீ ஸ்வாமிகள் தமது வாழ்நாள் முழுவதும் இத்தனை அற்புதமாக எந்த மகத்தான பண்பாட்டிற்கு பணி புரிந்து இருக்கிறாரோ, அந்தப் பண்பாடே நமது மனிதகுல முயற்சிக்கெல்லாம் அத்தியாவசியமான அடிப்படையாக இன்றும் உயிர் வாழ்ந்தாக வேண்டும்" என்கிறார்.

பாலபிராண்டனுக்குப் பிறகு நாற்பதாண்டுகளில் பல தேசங்களை சேந்த அறிஞர்களும் ஆத்ம சாதகர்களுக்கு, சமயத் தலைவர்களும், கலைஞர்களும், ராஜ தந்திரிகளும்கூடக் காஞ்சி மாமுனிவரைச் சந்தித்து அதன் மூலம் பாரதத்தின் அமர பண்பாட்டை ஆழ்ந்து அறிந்து கொண்டிருக்கிறார்கள். 1955-ல் ஸ்ரீ பெரியவர்களை சந்தித்த சிகாகோ பல்கலை கழக பேராசிரியர் மில்டன் சிங்கர், இந்தியாவுக்கு செல்லும் முன் அந்நாட்டு மகான்களின் "ஆத்ம சக்தி" பற்றி நான் நிறைய படித்தும் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் இது ஏதோ புராண காலத்தை ஸ் ந்த சமாச்சாரமாகவே இருக்கும் என்று எண்ணி வந்தேன். சங்கராச்சாரியாரைக் கண்ட பின்னர் தான், இந்த "ஆத்ம சக்தி" இன்றும் இந்து மதத்தில் ஜீவ சக்தியாக அங்கம் வகிக்கிறது என்று உணர்ந்தேன்" என்றார்.

பிரசித்தி பெற்ற எழுத்தாளரான ஆர்தர் கோஸ்ட்லர் தமது நூல் ஒன்றில் ஆச்சாரியார்களின் திருமுகத்தில் ஓடிய இளநகை அவர்களைக் குழந்தையாக மாற்றிய அழகைப் பரக்க வருணித்து விட்டு, "அந்தப் புன்னகையோடும், அது வெளியிட்ட உணர்வோடும் உவமைத்துப் பேசக்கூடிய இன்னொன்றை நான் வேறெங்கும் கண்டதேயில்லை. அதன் ஆகர்ஷணமும் மாதுரியமும் அசாதாரணமாக இருந்தன" என்கிறார்.

பெரியவர்களின் திருஷ்டி விசேஷம் பற்றி அமெரிக்க அறிஞர் ஆர்தர் ஐசன்பர்க் கூறுவதை பாருங்கள். "என்னை நோக்கிய அந்த நயனங்களில் அறிவும், அன்பும், அருளும் அற்புதக் கலவையாக பின்னியிருந்தன. இவற்றோடுகூட எவ்விதமோ, மிகவும் மிருதுவான நகைச்சுவை உணர்வையும் அவை பிரதிபலித்தன.

1955-ல் ஸ்ரீ பெரியவர்க்களை சந்தித்த சிகாகோ பல்கலைக் கழகப் பேராசிரியர் மில்டன் ஸிங்கர், இந்தியாவுக்கு செல்லும் முன் அந்நாட்டு மஹான்களின், 'ஆத்ம சக்தி' பற்றி நான் நிறைய படித்தும், கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால், இது எதோ புராதன காலத்தைச் சேர்ந்த சமாச்சாரமாகவே இருக்கும் என்று எண்ணி வந்தேன். சங்கராச்சாரியரைக் கண்டா பின்னர்தான், இந்த 'ஆத்ம சக்தி' இன்றும் இந்து மாதத்தில் ஜீவா சக்தியாக அங்கம் வகிக்கிறது என்று உணர்ந்தேன் என்றார்.

பிரசித்தி பெற்ற எழுத்தாளரான ஆர்தர் கோஸ்ட்லர் தமது நூல் ஒன்றில் ஆச்சாரியார்களின் திருமுகத்தில் ஓடிய இளநகை அவர்களைக் குழந்தையாக மாற்றிய அழகைப் பரக்க வருணித்து விட்டு, "அந்தப் புன்னகையோடும், அது வெளியிட்ட உணர்வோடும் உவமைத்துப் பேசக்கூடிய இன்னொன்றை நான் வேறெங்கும் கண்டதேயில்லை. அதன் ஆகர்ஷணமும் மாதுரியமும் அசாதாரணமாக இருந்தன" என்கிறார். பெரியவர்களின் திருஷ்டி விசேஷம் பற்றி அமெரிக்க அறிஞர் ஆர்தர் ஐசன்பர்க் கூறுவதை பாருங்கள். "என்னை நோக்கிய அந்த நயனங்களில் அறிவும், அன்பும், அருளும் அற்புதக் கலவையாக பின்னியிருந்தன. இவற்றோடுகூட எவ்விதமோ, மிகவும் மிருதுவான நகைச்சுவை உணர்வையும் அவை பிரதிபலித்தன.

*****

# குருநாதருக்கு நடைபெற்ற கனகாபிஷேகம்

12/3/1957-இல் நடைபெற்ற ஸ்ரீ பரமாச்சார்யாளின் பீடாரோகண பொன்விழாவை ஒட்டி அவர்களுக்கு கனகாபிஷேகம் செய்யவேண்டுமென்று பக்தர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்களோ தமக்கு ஏன் கனகாபிஷேகம் செய்கிறீர்கள்? "அதை சங்கரருக்கு செய்து மகிழுங்கள்" எனக் கட்டளை இட்டார்களா. குருநாதரின் கட்டளையை நிறைவேற்றும் வகையில், காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் உள்ள, ஆதிசங்கரரது சிலா விக்கிரஹத்திற்கு 4/5/1957 சங்கர ஜெயந்தியன்று புனித கங்கை நீரால் கடஸ்தாபனம் செய்து, மஹாந்யாஸ ருத்ர ஜெபம் ஜெபித்து, தங்கத்தினால் செய்யப்பட்ட புஷ்பங்களை கடத்தில் கலந்து அபிஷேகம் செய்யப்பட்டது. ஆயினும் சிஷ்யர்களின் அவா அத்துடன் நின்று விடவில்லை. மறுபடியும் ஆச்சார்யர்களை அணுகி, விஞ்ஞாபனம் செய்து கொண்டார்கள். பக்தர்களின் தீவிரமான பக்தியை மனதில் கொண்டு, அவர்களது விருப்பப்படி கனகாபிஷேகம் செய்து கொள்ள ஒருவாறு இணங்கினார்களா.

6/9/1957-ல் இந்த அபிஷேகத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டது. தினசரி செய்தித் தாள்களின் வாயிலாக, இந்த விழா சின்னக் காஞ்சிபுரத்தில் அந்தத் தேதியில் நடைபெறுவதை முன் கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது, பார்க்கக் கிடைக்காத இந்த புனித விழாவைக் காண, முதல் நாளே மக்கள் ஆயிரக்கணக்கில் காஞ்சியில் கூடி விட்டனர். கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, காவேரி புண்ய நதிகளின், புனித நீரை, பன்னிரண்டு குடங்களில், பொற்காசுகளுடன் நிரப்பி, ஏகாதச ருத்ர பாராயணம், ஹோமங்கள் செய்து அன்று பகல் ஒரு மணிக்கு ஜெகத் குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் திருக்கரங்களால், குருநாதருக்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது. காணக் கிடைக்காத இந்தக் காட்சியை முதல் தடவையாகக் கண்டவர்கள், பரவசமடைந்தனர். தாங்களே பாக்கியசாலிகள் எனக் கூறிக் கொண்டு ஆனந்தக் கண்ணீரில் மூழ்கினர். இதற்கு முன் 1954-ல் காஞ்சி மாநகரிலேயே மற்றொரு கனகாபிஷேகம் நடை பெற்றது பக்தர்களுக்கு நினைவிருக்கலாம்.

*****

# ஸ்தல மரங்கள் பற்றி ஒரு ஆய்வு

எல்லா ஆலயங்களிலும், அவை அமைந்துள்ள ஸ்தலங்களுக்கு (இடங்களுக்கு) பெருமை உண்டு. அங்கே உள்ள மூர்த்திகளுக்கும் பெருமை உண்டு. அங்கே அமைந்திருக்கும் தீர்த்தங்களும் பெருமை உண்டு. அதே போல, அந்த ஆலயங்களில் ' ஸ்தல விருக்ஷங்களுக்கும் (மரங்களுக்கும்) பெருமை உண்டு.

மரங்களுக்கு ஏன் இத்தனை முக்கியத்துவம் தரவேண்டும்? அப்படி அதில் என்ன இருக்கிறது? என்று பார்த்தால், முதலில் நமது மக்கள் இயற்கையை பெரிதும் நேசித்தார்கள். மரங்களின் மகத்துவத்தை அறிந்திருந்தனர். இன்றைக்கு விஞ்ஞானிகள் சொல்லும் விஷயங்களை, அன்றைக்கே நமது முன்னோர்கள் அறிந்திருந்தார்கள் என்பது மிகப்பெரிய அதிசயம்.

ஆதி நாளில் மனிதன் வெயில், மழை, பனி ஆகிய தாக்கங்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள மரத்தடியில் சரண் புகுந்தான். பின் அம்மரத்தில் இருந்து கிடைக்கும் காய்கள், பழங்களை உண்டு பசியாறினான். அதன் பட்டைகளை தன் ஆடையாக அணிந்து கொண்டான். காலம் செல்லச் செல்ல அதன் மருத்துவ குணங்களை அறிந்து தனக்கு பயன் படுத்திக்க கொண்டான். ஆக, தனக்கு பல விதங்களில் பயன் படும் மரத்தை இறையுருவாகக் கருதி வழிபட ஆரம்பித்தான்.

இறைவழிபாடு என்ற ஒன்று ஆரம்பமாகிய பின், மறக்காமல் ஆலயங்களில் மரங்களை நட்டுவைத்தான். அல்லது மரங்களை இருக்கும் பகுதியில் ஆலயங்களை அமைத்தான். உருவ வழிபாடுடன், மரவழிபாடும் இரண்டர கலந்தான. இறைவன், இறைவியின் பெயர்கூட மரங்களின் பெயர்களை ஒட்டி அமைந்ததை காணலாம். எடுத்துக் காட்டாக, "வில்வவனேஸ்வரர், வன்னீஸ்வரர், சரக்கொன்றை நாதர் இப்படி.

சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்களில் கூட மரங்களின் மகத்துவம் பேசப்படுகிறது. பிற்காலத்தில், ஆயுர்வேதம் உருவான பிறகு, முழுக்க முழுக்க தாவரங்களின் வகைகள், அவற்றின் பல்வேறு பாகங்கள், அவை எப்படி மருந்தாக பயன்படுகிறது என்பதை விரிவாக சொல்கின்றன. உட்கொள்ள மருந்தாக, கஷாயமாக, மேற் பூச்சாக இப்படி அதன் பல பயன்பாடுகளை பற்றி ஆயுர்வேதம், சித்த மருத்துவம் கூறுகின்றன. எனவேதான், நமது முன்னோர்கள் ஊரில் உள்ள ஆலயங்களில் விசேஷ குணம் வாய்ந்த மரங்களை நட்டுவைத்து, அதை தெய்வமாகவே கருதி வழிபட ஆரம்பித்தனர்.

ஒருபுறம் இப்படி இருக்க, மறுபுறம் மனிதன் தனது பேராசையால் காடுகளை அழிக்க ஆரம்பித்தான். இதனால் பல அறிய வகை மரங்கள் அழிந்தது மட்டுமல்லாமல், அதன் காரணமாய் இயற்கை சீற்றங்கள் உருவாகின. அறிய வகை தாவரங்கள் அழிந்தன. காடுகள் இருந்ததால் கிடைத்த "சமசீர் இயற்கை" அழிந்து, பூமி வெப்பமயம் ஆகியது. இப்போது சிலர் விழித்துக் கொண்டு மரங்களின் முக்கியத்துவத்தை பற்றி பேசவும், எழுதவும் ஆரம்பித்து உள்ளனர். நல்ல விஷயம், விழிப்புணர்ச்சி.

*(அடுத்தடுத்த கட்டுரைகளில் இதனை தொடர்ந்து பார்க்கலாம்)*

*****

# தாவர நோய்கள்: இந்துக்களின் அற்புத மூலிகை அறிவு

-லண்டன் ஸ்வாமிநாதன்

இந்துக்கள் வேத காலம் முதற்கொண்டு எல்லா அறிவியல் துறைகளிலும் கவனம் செலுத்தியுள்ளனர். அவைகளை சம்ஸ்க்ருதத்தில் எழுதியும் வைத்துள்ளதால் நமக்கு குறைந்தது 3000, 4000 ஆண்டு அறிவியல் வளர்ச்சி பற்றி அறிய முடிகிறது.

உலகிலேயே பழமையான நூலான ரிக் வேதத்தில் மூலிகைகளுக்காகவே ஒரு சூக்தம் ஒதுக்கியிருப்பதால் (ஓஷதி சூக்தம், ரிக் 10-97) எந்த அளவுக்கு அவர்களுக்கு மூலிகையின் பெருமை தெரிந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. முதல் மந் திரத்திலேயே 107 மூலிகைகள் பற்றிச் சொல்கிறார் ரிக் வேத கால டாக்டர். ஆயினும் அவரோ உரைகாரர்களோ நமக்கு 107 மூலிகைகளின் பெயர்களை சொல்லவில்லை. ஏனெனில் அக்காலத்தில் எல்லோருக்கும் அவை பற்றித் தெரியும். ஆனால் பிற்கால நூல்களான சுஸ்ருத சம்ஹிதா, சரக சம்ஹிதை பிருஹத் சம்ஹிதா முதலிய புஸ்தகங்கள் நமக்கு நிறைய மூலிகைகளின் பெயர்களை சொல்லி பயன்பாடுகளையும் அறிவிக்கின்றன.

அதர்வண வேத சூக்தங்களில் தாவரங்களை பல வகைகளாகப் பிரித்துப் பேசுவதால் அத்தகைய படிப்புகள் இருந்ததும் தெரிகிறது. பழம் கொடுக்கும் தாவரங்களை பலினி என்றும், பழம் தராத தாவரங்களை அபலா என்றும், பூக்கும் தாவரங்களை புஷ்பினி என்றும், பூவாத தாவரங்களை அபுஷ்பா என்றும், எப்போதும் பூத்துக் குலுங்கும் தாவரங்களை ப்ரஸூவரி என்றும் அழைத்தனர்

OLDEST BOTANICAL CLASSIFICATION (AV.8-7-26)

அதர்வ வேதத்தில் 8-7-26ல் ஒரே பாடலில் புஷ்பவதி, ப்ரஸூவதி, பலினீ, அபலா என்று வருவதால் உலகில் முதல் முதலில் தாவரங்களை வகைப்படுத்தியது இந்துக்கள்தான் என்பதும் தெளிவாகிறது.

தைத்ரீய சம்ஹிதையில் (யஜுர் வேதம்) மூல (வேர்) துல (பூங்கிளைகள்), காண்ட (தண்டு), வலச (மரக் கிளை), சாகா (பெரிய கிளைகள் ) புஷ்ப, பல(பழம்) பர்ண (இலை) என்ற தனித்தனி சொற்கள் கையாளப் படுகின்றன. ஸதபதப் பிராஹ்மணம் மேலும் பல சொற்களை எடுத்தாளுகிறது. இவ்வளவுக்கும் இவை எதுவும் தாவரவியல் (Botany) நூல் அல்ல. மதம் தொடர்பான நூல்களே.

முதல்முதலில் வ்ருக்ஷ ஆயூர்வேத என்ற சொல்லை 2300 ஆண்டுகளுக்கு முந்தைய கௌடில்யரின் (சாணக்கியரின்) அர்த்த சாஸ்திரத்தில் (2-24-1) காண்கிறோம். மரங்களின் ஆரோக்கியத்தை பராமரிக்கும் அற்புத துறை அது. விவசாய டைரக்டருக்கு (Director of Agriculture in Arthasasatra) க்ருஷி தந்த்ர/விவசாயம், சுல்வ, வ்ருக்ஷ ஆயுர்வேத தெரிந்திருக்கவேண்டும் அல்லது இவைகளை அறிந்த ஒருவரை உதவியாளராக

வைத்திருக்கவேண்டும் என்று சாணக்கியர் சொல்கிறார். அந்தந்த பருவத்தில் விதைகளைச் சேகரித்து வைக்கவேண்டும் என்றும் விளம்புகிறார். ஆகவே 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வேளாண் துறையும் அதற்கான அதிகாரிகளும் இருந்தது தெரிகிறது. முக்கியமான விஷயம் மரங்களுக்கான ஆயூர் வேதம் என்பதாகும்.

பின்னர் கஸ்யப சம்ஹிதா, வராகமிஹிரர் எழுதிய பிருஹத் சம்ஹிதா, விஷ்ணு தர்மோத்தர புராணம் (இரண்டாவது காண்டம்- அத்தியாயம் 300), அக்கினி புராணம் (282 ஆவது அத்தியாயம்) சுர பால எழுதிய வ்ருக்ஷ ஆயூர்வேத நூல்களில் மேல் விவரங்களை அறிகிறோம். தாவரவியல் தொடர்பான அபூர்வ விஷயங்களை இவை, போகிற போக்கில், சொல்கின்றன. ஆயினும் மரங்களுக்கு வரும் நோய்களை விவாதித்து குணப்படுத்துவது எப்படி என்பதை சுர பால எழுதிய வ்ருக்ஷ ஆயூர்வேத புஸ்தகத்தில் மட்டுமே காண முடிகிறது

மரங்களுக்கு ஏற்படும் கெடுதிகளை ஆறுகாரணங்களாகப் பிரிக்கிறது கஸ்யப சம்ஹிதா.

1. கடுங்குளிர்
2. கடும் வெப்பம்
3. கன மழை
4. சூறாவளிப் புயல்
5. மரங்களின் வேர்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைதல்
6. யானைகள் உராய்தல்

சீதோஷ்ண வர்ஷ வாதாதைர்மூலே வ்யாமிஸ்ரிதை ரபி

சாகினாம் து பவேத் ரோகோ த்விபானாம் லேகனேன ச – கஸ்யப சம்ஹிதா, பாடல் 71

இன்று நாம் பத்திரிக்கைகளைத் திறந்தால் இவற்றில் முதல் 4 காரணங்களால் பயிர்கள் அழி வதைப் படிக்கிறோம். ஐந்தாவது காரணம் நெருக்கமாகத் தாவரங்கள் வாழ்ந்தால் வரும் கேடுகள் பற்றிப் பேசுகிறது. யானைகள் உராய்தல் பற்றி சங்க இலக்கியப் பாடல்களில் காண்கிறோம். தமிழ்ப் புலவர்களும் சங்க காலத்திலேயே இதைக் கண்டு பாடலில் சேர்த்துள்ளனர்.

தாவரங்களுக்குக் கீழே வேர்கள் பின்னிப் பிணைந்தால் அவைகள் நன்றாகக் காய்க்காது என்று விஷ்ணு தர்மோத்தர புராணம் செப்புகிறது

அப்யாஸ ஜாதா தரவஹ ஸம் ஸ் ப்ருச ன்தஹ பரஸ்பரம்
அவ்யக்த மிஸ்ர மூலத்வாப வந்தி விபலா த்விஜ
தேஷாம் வ்யாதி ஸமுத்பதௌ ச்ருணு ராம சிகித்ஸதம்

வராஹ மிஹிரர் எழுதிய ப்ருஹத் சம்ஹிதா ஒரு கலைக்களஞ்சியம். அவர் 54 ஆவது அத்தியாயத்தில் 31 ஸ்லோகங்களில் விருட்ச (வ்ருக்ஷ) ஆயுர்வேதம் பற்றிப் பாடுகிறார். இலைகள் உதிர்தல், கிளைகள் காய்ந்து போதல், வளர்ச்சி தடைப்படுதல் முதலியவற்றை பருவ நிலை எப்படி உண்டாக்குகிறது என்று வராஹ மிஹிரர் விளக்குகிறார். மரங்களின் இலைகள் பச்சையத்தை இழந்து பாண்டுபத்ரதா (வெண்மை) ஆவதையும் கதைக்கிறார்.

நோய்கள் பற்றிச் சொல்வதோடு சிகிச்சை பற்றியும் சொல்கிறார்.

மரங்களின் கிளைகள் பாதிக்கப்பட்டால் அவைகளை வெட்டி, அந்த இடத்தில் களிம்பு தடவ வேண்டும் என்றும் பாலையும் தண்ணீரையும் கலந்து தெளிக்க வேண்டும் என்றும் கூறுகிறார் நூலாசிரியர் வராகமிஹிரர். பழங்கள் காய்க்காவிட்டால் ஆட்டுப் புழுக்கை, எள், பார்லி மாவு, மாட்டு மாமிசம் ஆகியவற்றைக் கலந்து 7 நாட்களுக்கு சிகிச்சை தர வேண்டும் என்பார். இன்று எவ்வளவோ நல்ல உரங்கள் வந்திருக்கலாம். 1500 ஆண்டுகளுக்கு முன்னரே இதன் துவக்கத்தை அவர் எழுத்தில் வடித்தது ஆய்வு மனப்பாண்மையைக் காட்டுகிறது

*****

# யார் பிச்சைக்காரர்?

தீபாவளி கொண்டாட்டம் முடிந்து தனது வீட்டுக்கு கிளம்புவதற்காக தயாரானது பரமேஸ்வரன் குடும்பம். பரமேஸ்வரன் கர்நாடகாவில் பெரிய கம்பெனி ஒன்றில் மேனேஜராக பணியாற்றி வருகிறார். அவருடைய மனைவி நித்தியாவும் பணிபுரிபவர் தான். அவர்களுக்கு ஆதித்யா என்ற நான்கு வயது மகன் இருக்கிறான். இவர்கள் அனைவரும் தங்கள் கிராமத்திற்கு தீபாவளி கொண்டாடுவதற்காக வந்திருந்தார்கள். பரமேஸ்வரன் குடும்பம் அவர்கள் சொந்த கிராமத்திற்கு வந்து சற்றேறக்குறைய இரண்டு வருடங்கள் ஆகியிருக்கும். இரண்டு வருடங்கள் கழித்து தன் மகன், மருமகள், பேரனைப் பார்ப்பதால் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தாள் பரமேஸ்வரனின் அன்னை அன்னபூரணி.

வகை வகையான சாப்பாடு பலகாரம் என்றெல்லாம் பார்த்து பார்த்து செய்து அவர்களுக்கு கொடுத்து மகிழ்ந்தாள். தீபாவளி கொண்டாட்டம் முடிந்து பரமேஸ்வரன் ஊருக்கு கிளம்புவதற்கு தனது காரில் எல்லா பொருட்களையும் ஏற்றினான். அன்னபூரணி அம்மாள் காய்கறிகள் பலசரக்கு பொருட்கள் என்று பல பொருட்களையும் அவனிடத்தில் கொடுத்து காரில் ஏற்றச் சொன்னார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நித்யாவிற்கு எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவ்வளவு பெரிய சிட்டியில் உள்ள கடைகளில் கிடைக்காதது இங்கிருந்து என்ன எடுத்து போகப் போகிறோம் என்று முணுமுணுத்தபடியே பரமேஸ்வரனை கடிந்து கொண்டாள்.

பரமேஸ்வரனும் பொருட்களையெல்லாம் வண்டியில் ஏற்றினார். எல்லோரும் வண்டியில் ஏறி புறப்பட அங்கிருந்து வந்த அன்னபூரணி “பரமேஸ்வரா இதை மறந்துட்டியே” என்று கூறி வாழை இலையில் கட்டி வைத்திருந்த எலுமிச்சை மற்றும் தயிர் சாதம் பொட்டலத்தை கொடுத்தாள். அங்கிருந்த வந்த நித்தியா “அத்தை இதெல்லாம் வேண்டாம் போற வழியில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்”.

“இல்லம்மா நீங்க போய் சேர்வதற்கு குறைந்தது 10 மணிநேரமாவது ஆகும். இது கையில் இருந்தால் போற வழியிலே உங்களுக்கு உதவியாய் இருக்கும். இன்று நான் சீக்கிரமாக எழுந்து பண்ணினேன். அது கூட ஆதித்யாவுக்கு பிடித்த உருளைக்கிழங்கு வறுவல்லையும் வச்சிருக்கேன். தீபாவளிக்கு செஞ்ச அதிரசத்தை ஆதித்யா ரொம்ப பிரியமா சாப்பிட்டான். அதையும் ஒரு டப்பாவில் வச்சிருக்கேன் ஒன்னும் கெட்டுப் போகாது எடுத்துட்டு போம்மா”.
“அத்தை உங்களுக்கு புரியவில்லை. இதெல்லாம் யாரும் சாப்பிட போறதும் இல்லை எப்படியும் வழியிலேயே நிறுத்தி பீட்சா பர்கர் எல்லாம்தான் ஆதித்யா கேட்பான் அதுதான் சாப்பிட கொடுப்போம். இது வேஸ்ட் ஆகும் இங்கேயே யாராவது பிச்சைக்காரர்களுக்கு குடுங்க” என்று சட்டென்று தயங்காமல் கூறினாள் நித்யா.

அன்னபூரணியின் முகம் வாடியது. அதைக்கண்ட பரமேஸ்வரன் “சரிம்மா எங்கிட்ட குடும்மா நான் எடுத்துக்கிறேன்” என்று கூறி காரில் வைக்க போனான். கோபத்தோடு “வேணுமின்னா பின்னாலே வையுங்க இதை யாரு தொட போறா” என்று கடுப்புஅடைந்தாள். மகனையும்

மருமகளையும் வழி அனுப்பும் பொழுது பேரப் பிள்ளையை கட்டித் தழுவி உச்சி முகர்ந்து கண்ணீர் மல்க டாட்டா காட்டி அனுப்பினாள் அன்னபூரணி.

தெருவின் முக்கு வரை கார் சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டு இருந்தாள் அன்னபூரணி. கர்நாடகாவை நோக்கி கார் விரைந்தது. பரமேஸ்வரன் காரை ஓட்டினான் பின் சீட்டில் ஆதித்யாவும் முன் சீட்டில் நித்யாவும் அமர்ந்திருந்தனர். "உங்க அம்மா எது சொன்னாலும் கேட்கணுமா, ஏற்கனவே லக்கேஜ் போதாதுன்னு இந்த சாப்பாடு பொட்டலம் தேவையா, பேசாமல் வழியிலேயே பிச்சைக்காரர் வரும்போது நிறுத்துங்க, உங்க கையாலே தூக்கி கொடுத்துட்டு வாங்க" என்றாள்.

"நித்யா காலையிலேயே எழுந்து அம்மா பண்ணி இருக்கிறாள். எடுத்துட்டு வரலேன்னா அவள் மனது எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கும். புரிந்து கொள்" என்றார் பரமேஸ்வரன். "நான் சொன்னா எதைத்தான் கேட்கிறீர்கள்" என்று முணுமுணுத்துக் கொண்டே காதில் ஹெட்போன் போட்டு பாட்டு கேட்க துவங்கினாள் நித்தியா. ஏறக்குறைய 3 மணிநேரம் பரமேஸ்வரன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று காரில் ஏதோ சத்தம் கேட்டு கார் கட்டுக்கடங்காமல் நிலைகுலைந்து சென்றது. பரமேஸ்வரன் ஒருவழியாக கண்ட்ரோல் பண்ணி காரை நிறுத்தினான். அப்போது தூக்கத்திலிருந்து விழித்தாள் நித்யா. "என்னாச்சு" என்று கேட்டாள். "தெரியலை ஏதோ பெல்ட் கட்டாகி இருக்கும் போலிருக்கு இறங்கி பார்க்கிறேன்" என்று கூறி காரின் பேனட்டை திறந்து பார்த்தான் பரமேஸ்வரன்.

பரமேஸ்வரனுக்கு கார் ஓட்ட தெரியுமே ஒழிய அதிலுள்ள ரிப்பேர் வேலைகள் எல்லாம் தெரியாது. தெரிந்த அளவு எவ்வளவோ போராடிப் பார்த்தும் கார் இம்மியளவும் ஸ்டார்ட் ஆகவில்லை. நிற்கின்ற இடமோ ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு வனாந்திரம் ஆகும். என்ன செய்வதென்று தெரியாமல் பரமேஸ்வரனும் நித்யாவும் விழித்தார்கள். காரைவிட்டு செல்லவும் முடியாமல் ரிப்பேர் செய்வதற்கும் வழியில்லாமல் செய்வது அறியாது விழித்தார்கள். பரமேஸ்வரன் அவருடைய நண்பர்கள் யார் யாருக்கோ போன் செய்து பார்த்தான். எல்லோரும் பிஸியாக இருந்ததால் யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. கடைசியாக பரமேஸ்வரன் பெங்களூரில் இருக்கும் டிராவல்ஸ் ஒன்றில் போன் செய்து ஒரு வண்டியையும் அதனுடன் ஒரு மெக்கானிக் கையும் அனுப்புமாறு கூறினான். டிராவல் காரரும் இதற்குண்டான பணத்தை கூகுள் பேவில் அனுப்புமாறும் பிறகு லொக்கேஷன் அனுப்புமாறு கேட்டுக்கொண்டு பரமேஸ்வரன் சொன்ன இடத்திற்கு வண்டி வருவதற்கு குறைந்தபட்சம் 5 மணி நேரம் ஆகும் என்றான்.

பரமேஸ்வரனும் நித்யாவும் வேறுவழியில்லாமல் காத்திருக்க வேண்டியிருந்தது. நேரம் ஓடியது ஆதித்யா நித்யாவை பார்த்து "அம்மா பசிக்குது ஏதாவது கொடு" என்றான் நித்யாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பரமேஸ்வரன் அன்னபூரணி கொடுத்த சாப்பாடு பொட்டலத்தை பிரித்து சாப்பிட ஆரம்பித்தான். ஆதித்யாவுக்கு ஊட்டிவிட்டு தானும் சாப்பிட ஆரம்பித்தான். நித்யாவுக்கும் ஒரு பொட்டலத்தை கொடுத்தான். நித்தியா வேறு வழி இல்லாமல்

பொட்டலத்தை பிரித்து சாப்பிட துவங்கினாள். அப்போது பரமேஸ்வரன் உடைய போனுக்கு ரிங் வந்தது அன்னபூரணி லைனில் இருந்தாள். “என்ன கண்ணா” எவ்வளவு தூரம் போய் இருக்கே ஆதித்யா என்ன பண்றான். நித்யா டயர்டா இருக்காளா. நீங்க ஏதாவது சாப்பிட்டீங்களா. என்று கேட்டாள். அதற்கு பரமேஸ்வரன் “நீங்க கொடுத்த சாப்பாட்டைதாம்மா இந்தப் பிச்சைக்காரர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்” என்று சொல்லி போனை வைத்துவிட்டு நித்யாவை பார்த்தான் நித்யா பேசாமல் தலை குனிந்து கொண்டாள்.

அன்பர்களே! நம்மில் பலர் நாகரீகம் என்ற பெயரால் பெரியவர்கள் சொல்வதை நித்யாவை போல உதாசீனப் படுத்துகிறார்கள். அனுபவம் மிகுந்த பெரியவர்களுடைய செயல்கள் நமக்கு பார்ப்பதற்கு பைத்தியக்காரத்தனமாக இருக்கும். ஆனால் பிரச்சனை வரும் பொழுதுதான் அவர்களுடைய தீர்க்கதரிசனம் புரியும். இதற்கிடையில் அமிலத்தை தெளிப்பது போல வார்த்தைகளை தெளித்து அவர்களை காயப்படுத்தி விடுகிறோம். அந்தக் காயத்தை சரி படுத்துவதற்கு நாம் எத்தனை பாடுபட்டாலும் வலி என்பது அவர்களிடம் இருக்கத்தான் செய்யும். எனவே காயப்படுத்தாமல் இருக்க முயற்சிப்போம்.

வாழ்க வையகம், வாழ்க வளமுடன்!!

அன்புடன்

மனோகர்

குவைத்

*****

# பலன் தரும் பதிகங்கள்

அனைவருக்கும் நமஸ்காரம்.

மானிடராக பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும்” என்பது நாம் அறிந்ததே. ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு நேரமும் காலமும் அவசியம். நொடிகள் மணிகளாகி நாட்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி மாதங்கள் வருடமாகிறது. மனித வாழ்க்கையிலும் குழந்தை பிறந்து வளர்ந்து இளமைப் பருவத்தை கடந்து முதுமையை அடைகின்றது. அதற்குள் மனிதர்கள் படும் பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. வாழ்க்கை என்னும் பாதையிலுள்ள மேடு பள்ளங்களை எல்லாம் கடந்து வருபவர்கள் மிகவும் சிறப்பு பெற்றவர்கள். அதனால் தான் 60 வயது நிறைவு அடைந்தவுடன் ஒரு விழா எடுக்கின்றனர். எல்லோருக்குமே இந்த வாய்ப்பு அமைவதில்லை. தம்பதிகள் இருவரும் ஒன்றாக இணைந்து பிள்ளைகளுடனும், பேரக்குழந்தைகளுடன் கொண்டாடும் திருநாள். அந்நாளில் எல்லோரும் மனமகிழ்ச்சியுடன் இருந்து ஆசி பெற பலன் தரும் பதிகங்களில் உள்ள மங்கள பதிகத்தை படித்தால் நல்ல ஒலி அலைகள் பரவி எல்லோரும் எல்லா வளமும் நலமும் பெறுவார்கள். மேலும் திருமணம், மணிவிழா எல்லா சுப நிகழ்ச்சிகளிலும் இதைப் பாடினால் எல்லா வளமும் நலமும் பெறலாம். இப்பதிகத்தை பற்றி இறைவனின் பாத கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.

## பதிகம் - 11

## திருமணம், மணிவிழா, சுப நிகழ்ச்சிகளில் வாழ்த்த பயன்படும் மங்களப் பதிகம்

மனிதர்களில் பல ஆண்கள் பெண்களின் மனதை சுக்கு சுக்காக உடைத்து விடுகிறார்கள். அந்த உடைந்த சிதறல்கள் யாரையும் கிழித்து விடக்கூடாது என்று தங்களுக்குள்ளேயே எல்லாவற்றையும் புதைத்து விடுகிறார்கள். அதனால் தான் தம்பதியுடன் மணி விழா கொண்டாடுகின்றனர். எத்தனை கோடி பணமிருந்தாலும் ஆணும், பெண்ணும் துணை இல்லாவிட்டால் மணிவிழா கொண்டாட இயலாது. இதிலிருந்து எத்தனை துன்பங்கள் வந்தாலும் ஆண், பெண் இருவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை அறியலாம்.

**பதிக வரலாறு**

திருஞானசம்பந்த பெருமான் மதுரையில் தங்கியிருந்த சமயம் அவருடைய தந்தையார் சிவபாத இருதயர் வந்தார். தனக்கு சிறந்த தந்தையை அளித்ததற்காக இறைவனின் கருணையை எண்ணி மகிழ்ந்து இப்பதிகத்தை அருளினார். அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் திருமணம் மற்றும் எல்லா சுபகாரியங்களுக்கும் பாடவேண்டிய மங்களப் பதிகம் ஆகும்.

திருமருகல் பண்: திருக்கழுமலம்
ராகம்: கொல்லி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறை
விலைக்
கண்ணில் நல்லதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே

போதையார் பொற்கிண்ணத்து அடிசில்
பொல்லாதனத்
தாதையார் முனிஉற தானெனை
ஆண்டவன்
காதையார் குழைஇனன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை
இருந்ததே

தொண்டணை செய்தொழில் துயர் அறுத்து
உய்யலாம்
வண்டனை கொன்றையான் மதுமலர்
சடைமுடி
கண் துணை நெற்றியான் கழுமல
வளநகர்ப்
பெண் துணை யாக ஓர் பெருந்தகை
இருந்ததே

அயர் உள்ளோம் என்று நீ அசைவு ஒழி
நெஞ்சமே
நியர் வளை முன்கையால் நேரிழை
அவளொடும்
கயல் வயல் குதிக்கொளும் கழுமல
வளநகர்ப்
பெயர் பல துதி செய்ய பெருந்தகை
இருந்ததே

அடைவிலோம் என்று நீ அயர் ஒழி
நெஞ்சமே
விடை அமர் கொடியினன் விண்ணவர்
தொழுதெழும்
கடை உயர் மாடம் ஆர்கழுமல வளநகர்ப்
பெடை நடை அவளொடும் பெருந்தகை
இருந்ததே

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறை பல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ப்
சிற்றிடை போல் சூல்திருந்திழை
யவளொடும்
பெற்றனை ஆளுடைப் பெருந்தகை
இருந்ததே

குறைவளை அது மொழி குறைவு ஒழி
நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை
யவளொடும்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறை வளர் சடைமுடி பெருந்தகை
இருந்ததே

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
சுருக்குவாள் அருள் செய்தான் கழுமல
வளநகர்ப்
பெருக்குநீர் அவளொடும் பெருந்தகை
இருந்ததே

நெடியவன் பிரமனும் நினைப்பு அரிதாய்
அவர்
அடியோடு முடி அறியா அழல் உருவினன்
கடிகமல் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை
இருந்ததே

தாருறு தட்டுடை சமணர் சாக்கியர்கள் தம்

ஆருறு சொற்களை தடியினை அடைந்து உய்மின்
கார்ஒரு பொழில் வளர் கழுமல வளநகர்ப்
பேரற தாள் ஓடும் பெருந்தகை இருந்ததே

கரும் தடம் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெரும் தடம் கொங்கையோடு இருந்த எம் பிரான் தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகம் ஆள்வரே.

திருச்சிற்றம்பலம்

**வாழ்க்கை அனுபவம்**

வயல் வெளிகள் தென்னந்தோப்புகள் வாழைத் தோப்புகள் நிறைந்த ஒரு கிராமம் அங்கு கைலாசம் ஈஸ்வரன் என்ற இரட்டை சகோதரர்கள் வசித்து வந்தனர். இருவருக்கும் ஒரே நாளில் பார்வதி, விசாலாட்சி என்ற பெண்களை திருமணம் செய்தனர். சிறிது காலம் ஒற்றுமையாக இருந்த குடும்பம் உறவினர் ஒருவரின் சூழ்ச்சியால் பிரிந்துவிட்டனர். வீட்டின் நடுவே தடுப்பு சுவர் எழுப்பி வீடு இரண்டானது. பாகப்பிரிவினை என்ற பெயரில் ஈஸ்வரனுக்கு சிறிதளவு நிலமே கொடுக்கப்பட்டது. கைலாசம் அனைத்தையும் வைத்து மிகுந்த செல்வத்துடன் இருந்தான்.

ஈஸ்வரன் விசாலாட்சி இறைவனை வேண்டி இருப்பதைக் கொண்டு மிகுந்த மனநிறைவோடு எளிமையோடு வாழ்ந்து வந்தனர். இந்நிலையிலும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஏழைகளுக்கு உதவி வந்தனர். பார்வதி, விசாலாட்சி இருவரும் கருவுற்று ஒரே நாளில் ஒரே நேரத்தில் இருவருக்கும் ஆண் குழந்தைகள் பிறந்தன. கணேசன், கந்தன் என்று பெயரிட்டனர். கணேசன் செல்வ சீமானாக வளர்க்கப்பட்டார். கந்தன் மிகவும் எளிமையாக அன்பானவன் ஆக வளர்க்கப்பட்டான்.

இருவரும் படித்து பிறகு தக்க வயது வந்தவுடன் இருவருக்கும் திருமணம் நடந்தது. கணேசனுக்கு கமலா என்ற பெண்ணும் கந்தனுக்கு வள்ளி என்ற பெண்ணும் துணைவிகள். காலங்கள் ஓடின. கைலாசம், ஈஸ்வரன் இரட்டையர்கள் இருவருக்கும் 60 வயது வந்தது. மணிவிழா கொண்டாட அவரவர் குடும்பங்கள் முடிவெடுத்து அதற்கான வேலைகளை பார்த்தனர். அண்ணன் கைலாசத்துக்கு விடியற்காலையிலும் தம்பி ஈஸ்வரனுக்கு அடுத்த முகூர்த்தத்தில் விழா கொண்டாட நேரம் கணிக்கப்பட்டது. செல்வந்தன் கைலாசம் வீட்டில் தடபுடலாக ஏற்பாடு காலை விதவிதமான சிற்றுண்டிகள் மதியம் அறுசுவை உணவு என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். உறவினர்கள் எல்லோரும் செல்வந்தன் கைலாசம் வீட்டிற்கு வந்தனர்.
ஏழை ஈஸ்வரன் வீட்டில் இறைவனுக்கு பிரசாதமும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பசியார தங்களால் இயன்ற அளவு உணவு சமைத்தனர். விடியற்காலை விழா நடப்பதற்கு முன்னால் கைலாசம் வீட்டில் உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் எல்லோரும் கலைந்து சென்றுவிட்டனர். சமையற்காரர்கள் அனைவரும் வெளியே சென்றுவிட்டனர். எல்லோரும் கலங்கி நின்றனர்.

ஈஸ்வரன் வீட்டில் அடுத்த முகூர்த்தத்தில் விழா நடைபெற துவங்கியது. எல்லோரும் இறைவனை வணங்கினர். அப்போது ஒரு பெரியவர் ஈஸ்வரனை நன்கு அறிந்தவர். மணி விழாவிற்கு வந்திருந்தார். அவர் இந்த மங்கள பதிகத்தை உரக்க பாடினார். எல்லோரும் மனம் மகிழ்ந்தனர். அந்த ஒலி அலைகள் எல்லா பக்கமும் பரவியது. இதைக் கேட்ட கைலாசம் குடும்பம் ஈஸ்வரன் வீட்டிற்கு வந்தனர். உறவினர்களும் ஒருவர் பின் ஒருவராக ஈஸ்வரன் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் அனைவரையும் ஈஸ்வரன் குடும்பத்தார் அன்போடு வரவேற்றனர். முதலில் அண்ணன் கைலாசத்திற்கு சிறிது நேரம் கழித்து ஈஸ்வரனுக்கும் மணி விழா சிறப்பாக நடந்தது.

கைலாசம் ஈஸ்வரன் இருவருக்கும் ஈஸ்வரன் வீட்டிலேயே மணிவிழா கொண்டாடப்பட்டது. கைலாசம் தன் தவற்றை உணர்ந்தார். பிறகு கைலாசம் ஈஸ்வரன் தம்பதிகளிடம் எல்லோரும் ஆசி பெற்றார்கள். ஈஸ்வரன் வீட்டிலுள்ள பிரசாதம் மற்றும் உணவுகள் அனைவருக்கும் பரிமாறப்பட்டது. இறைவன் கருணையால் எல்லோரும் மனநிறைவோடு உணவு உண்டு கிளம்பினார்கள். இதிலிருந்து பதிகத்தின் மகிமையை நாம் அறியலாம். இப்பதிகத்தை திருமணம், மணிவிழா மற்றும் எல்லா சுப காரியங்களிலும் பாடினால் எல்லா வளமும் நலமும் பெறலாம்.

அன்பர்களே! இந்தப் பதிகத்தின் மகிமையை என்னவென்று சொல்வது. இன்னும் மற்றொரு பதிகத்தில் மீண்டும் சந்திப்போம்.

அன்பர்களே இந்தப் பதிகத்தின் மகிமையை என்னென்று சொல்வது.

அனைவருக்கும் நன்றி, திருச்சிற்றம்பலம்

அன்புடன்
கலாவதி, ஊட்டி

*****